# சத்திய வேத
# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


> **அதற்கு யேசுநாதர் திருவுளம்பற்றினதாவது: என் அடக்கத்தின் நாளுக்கென்று இதை வைத்துக்கொள்ளும்படி அவளை விட்டுவிடுங்கள்** (அரு. 12: 7).
>
> *யேசுவின் மரணத்திற்குப்பின் அவருடைய உடலுக்கு நறுநெய் பூசமுடியுமோஎன்று அஞ்சி மரியமதலேன் முன்னரே தனது பணியை முடிக்க வந்துவிட்டனளோ?*


26-ம் புத். | 1971-ம் ஆண்டு பங்குனி மாதம் 27-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 12-ம் இல.


## கிறீஸ்தவ சபைகளின் ஒற்றுமை துரிதப்படுத்தப்படும் —பாப்பரசர்

இவ்வருட ஆரம்பத்தில் பரிசுத்த தந்தையைச் சந்தித்து பல ஒற்றுமை விஷயங்களிலும் முடிவுகாணும் நோக்கத்துடன் கொன்ஸ்தாந்திநோப்பிள் பிதாப்பிதாவாகிய அத்தனகோறஸ் அடிகளார் தமது விசேஷ தூதுவர் ஒருவரை அனுப்பியிருந்தார்; பிதாப்பிதாவின் பெருங்குணத்தைப் பாராட்டிய பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் அவருக்கு அண்மையில் எழுதியிருந்த கடிதத்தில் இரு கிறிஸ்தவ சபைகளிடையேயும் உள்ள வித்தியாசங்கள் சமீபகாலத்தில் குறைவடைந்ததற்கு விசேஷ பொறுப்பு பிதாப்பிதாவினுடையதே எனக்கூறி விரைவில் பூரண ஒற்றுமை காணத் தன்னாலாகிய யாவற்றையும் செய்ய வாக்குப் பண்ணியிருக்கிறார்.

## துரிதப்பட வேண்டாம்

—கருதினால் கிருசியஸ்

இந்திய கருதினால் கிருசியஸ் அடிகளார் உலகில் தோன்றியிருக்கும் துரிதமான மாற்றங்கள் மக்களுக்கு நன்மையளிக்கின்றனவாயில்லையென எடுத்துக்காட்டியிருக்கிறார். "எங்கு பார்த்தாலும் மாற்றமயமாகவே காட்சியளிக்கின்றது. சர்வகலாசாலைகள் பள்ளிக்கூடங்கள் யாவும் பரிசோதனைத் தலங்களாய்விட்டன. குடும்ப வாழ்க்கை சமூக நாட்டங்கள் கலாச்சாரப் போக்குகள் யாவும் துரிதமாய் மாற்றமடைந்து வருகின்றன. இத்தகைய துரிதப்போக்கைசமயவழிபாட்டு முறைகளிலும் அதிதீவிரமாக உட்புகுத்திவிடப் பலர் முயல்கின்றனர். ஆனால் அதன் விளைவு நன்மையாயிருக்க முடியாது. ஆகவே அவதிப்பட்டுத் துரிதப்பட வேண்டாம், என்பதே என் புத்திமதி" என்றார் அடிகளார்.

## கினியாதேச நிலைமையினால் பாப்பரசர் கவலைப்படுகின்றார்

கினியாதேசத்தில் இடதுசார்பான அரசாங்கம் ஆட்சியை அண்மையில் கைப்பற்றிக்கொண்டதன்பின் அங்கு பல அநீதியான சம்பவங்கள் நடந்துவருகின்றன. அத்தேசத்துக்கெதிராக அந்நியர் படையெடுக்க உதவி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பல நூற்றுக்கணக்கானவர் தேற விசாரிக்கப்படாது சுட்டுக் கொல்லப்பட்டும், மறியல் இடப்பட்டும் இருக்கின்றனர். அத்தேச அதிமேற்றிராணியாராகிய சிடிம்போ அடிகளாரின்மேலும் இக் குற்றம் சாட்டப்பட்டு, அவரைச் சுட்டுக் கொல்லத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் பரிசுத்த தந்தையின் முயற்சியால் அவருக்கு கொலைத் தண்டனை நீக்கப்பட்டுள்ளதெனினும் ஆயுள்கால கடூழியத் தண்டனைக்கு அவர் ஆளாயிருக்கிறார்—சிடிம்போ அடிகளார் நிலைமையாலும் நூற்றுக்கணக்கான குற்றமற்ற பலரின் நிலைமையாலும் பாப்பரசருக்குப் பெருங் கவலையுண்டு.

## ஆயர்கூற்றுக்கு கார்ள் மார்க்ஸ் ஆதரவு

தென் அமெரிக்க சில்லி தேசத்தின் ஜனாதிபதி சல்வடோர் அலன்டே என்பவர் அத்தேசத்தில் விவாகரத்துப் பெற்றுக்கொள்வதை மிக இலேசான கருமமாக்கக் கங்கணம் கட்டிநிற்கிறார். ஆனால் அத்தேச ஆயர்மாரின் சங்கம் அதை எதிர்த்து நிற்கின்றது. அவர்கள் அண்மையில் மக்களுக்கு விடுத்திருக்கும் நிருபத்தில் ஜனாதிபதி அலெண்டே கொம்யூனிஸ்த கொள்கைகளிற் பலவற்றை ஆதரிப்பவராயினும் இதுகருமத்தில் கார்ள் மார்க்சின் போதனைக்கு எதிராகவே அவர் நடந்துகொள்கிறார் என்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றனர். "விவாகமானது சமூகத்தில் கொண்டுள்ள ஆழ்ந்த வேர்களின் காரணமாக, விவாகத்தை ரத்துச்செய்ய தனிநபர் கொள்ளும் எப்போக்கையும் ஆதரிக்க இடமில்லை" என கார்ள் மார்க்ஸ் கூறியிருப்பதை அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

## சமூக-பொருளாதார நல்வழி காட்டிகளுக்குப் பயிற்சி

பொது நிலையிலுள்ள கிறிஸ்தவர்களாயினும் பிற சமயத்தவராயினும் மக்கள் சமூகங்களுக்கு நல் வழிகாட்டிகளாகத் தொண்டுசெய்யத்தக்க பயிற்சி அளிப்பதற்கு கொழும்பு பொறல்லாப் பிரிவிலுள்ள சமூக பொருளாதார வளர்ச்சி நிலையம் முன்வந்திருக்கின்றது. பயிற்சி பெறுவோர் கிராமங்கள்தோறும் சென்று பாமரமக்களின் முன்னேற்றத்துக்குத் தொண்டு செய்யக் கடமைப்பட்டவராவர். வார இறுதியிலுள்ள இரு நாட்கள் கொண்ட பத்துவாரப் பயிற்சி அளிக்கப்படும். இவ்வியக்கத்தில் வணக்கத்துக்குரிய ஜோ பர்ணாந்து சுவாமியார் மிகவும் ஊக்கத்துடன் உழைத்துவருகிறார். "ஒரு மனிதனின் ஆன்ம வளர்ச்சியுடன் மறு தேவைகளையும் அவன் பெற்றுக்கொள்ள வழிவகுப்பதே" இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

## பின்லாந்து ஜனாதிபதி பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்தார்

சென்ற மாதம் பின்லாந்து தேச ஜனாதிபதி டக்டர் கெக்கொனென் அவர்கள் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசரை வத்திக்கானில் சந்தித்து இருவரும் பாப்பரசரின் புத்தகசாலை மன்றத்தில் ஒரு மணித்தியால நேரமாக பல கருமங்களையும் ஆராய்ந்துகொண்டனர். லூதரன் சபைக் கிறிஸ்தவர்களே பெரும்பாலுமுள்ள பின்லாந்து தேச ஜனாதிபதி ஒருவர் பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்தது இதுவே சரித்திரத்தில் முதல்முறையாகும். ஐரோப்பிய கிழக்குத்திசை நாடுகளுக்கும் மேற்குத்திசை நாடுகளுக்கும் நல்லுறவு ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே ஜனாதிபதி பாப்பரசரையும் இத்தாலிய அதிகாரிகளையும் தரிசித்திருக்கிறார்.

## மரியாயின் சேனையின் யூபிலி விழாவின் முன்னோடி

மரியாயின்சேனை இவ்வாண்டு புரட்டாசி மாதம் 7ஆம் திகதியுடன் 50 வருட சேவையின் நிறைவைக் காண்கின்றது. அவ்விழாவுக்கு ஒரு முன்னோடியாக சித்திரை மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையும் அகில இலங்கைரீதியில் கொழும்பு சஞ். சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன நிலையத்தின் நிகழ்ச்சிகளில் ஒன்றாக சித்திரை மாதம் 24ஆம் திகதி வானொலிநிகழ்ச்சி ஒன்று நடைபெறும். இலங்கையில் மரியாயின்சேனை இங்குள்ள 6 மேற்றிராசனங்களிலும் நிலைபெற்றிருக்கின்றது. அங்கத்தினரின் மொத்தத் தொகை சுமார் 7500. துணை அங்கத்தினர் பல்லாயிரக்கணக்கானோர் உளர். சஞ் சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருக்கும் கூட்டங்களில் பலவகைப்பட்ட அங்கத்தினர்களுக்கும் விசேஷ நிகழ்ச்சிகள் ஆயத்தம் செய்யப்படுகின்றன.

## ஸ்பெயின் தேசத்தில் அரசாங்க- திருச்சபை உடன்படிக்கை மாற்றமா?

ஸ்பெயின் தேசம் வத்திக்கானுடன் 1953-ம் ஆண்டு செய்துகொண்ட உடன்படிக்கை மாற்றப்பட்டு, முன்பு திருச்சபை அரசாங்கத்துடன் கொண்டுள்ள இறுகிய தொடர்புகள் அகற்றப்பட்டு, வருங்காலத்தில் கூடிய சுயாதீனமுடையதாயிருக்க வழிவகுக்கப்படும் என அத்தேச வெளிநாட்டு விவகார மந்திரி இலாகா அண்மையில் அறிவித்திருக்கின்றது. புதிய உடன்படிக்கை ஷரத்துக்களை அரசாங்கம் ஏற்கனவே தயாரித்திருப்பதாகவும் வத்திக்கானுடன் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறுமெனவும் மேலும் அவ்வறிக்கை கூறியிருக்கின்றது.

## டொம் ஹெல்டர் அடிகளுக்கு நொபெல் பரிசா?

பிறேசில்தேச ஒலின்டா—றெசிபெ பிரதேச அதிமேற்றிராணியாராகிய டொம் ஹெல்டர் அடிகளாருக்கு இவ்வருட நொபெல் சமாதானப் பரிசு கொடுக்கப்பட வேண்டுமென சுவிடன் தேசத்திலும் மேற்கு ஜேர்மனியிலும் பல ஆட்சிமன்ற அங்கத்தினர் முயற்சித்து வருகின்றனர். இவர்களது முயற்சி சித்தியடையும் பருவத்தை எய்துவதாகச் செய்திகள் கூறுகின்றன. டொம் ஹெல்டர் அடிகளார் அத்தேச வறிய மக்களின் முன்னேற்றத்துக்காக அயராது உழைப்பவர்.

**“ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ”**

# செய்திகள்

## தனியார் வாகனங்கள்

அவசரகால நிலைமையைத் தொடர்ந்து பொதுசன பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி, தனியார் வாகனங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றைத் தற்காலிகமாகப் பொறுப்பேற்கவும், எண்ணெய் வழங்குவதை மட்டுப்படுத்தும, பொறுப்பேற்கவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடைத்திருக்கிறது. அவசரகாலநிலைமை பிறப்பிக்கப்பட்ட போதிலும் பத்திரிகைச் செய்திகள் தணிக்கை செய்யப்படமாட்டாவெனத் தெரியவருகிறது.

## குடியரசாக்கும் பிரேரணை

அரசியல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனஞ்செய்வதென்ற தீர்மானம் சென்ற 15ஆம் திகதியன்று அரசியல் நிர்ணய கூட்டத்திலே பலத்த கரகோஷத்தின் மத்தியில் ஏகமனதாக நிறைவேறியது.

## பிரதமரின் வேண்டுகோள்

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுமுகமாகத் தமது பிள்ளைகள் தேசத்துரோக செயல்களில் ஈடுபடாமல் பெற்றோர் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சகலபெற்றோருக்கும் பிரதமர் பண்டாரநாயக்கா ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். கைக்குண்டுகளையும், மற்றும் பயங்கர ஆயுதங்களையும் உபயோகித்து மக்களின் மனதில் பீதியை உண்டுபண்ணும் முயற்சியில் பல இளைஞர் கோஷ்டிகள் இரகசியமாக ஈடுபட்டு வருகின்றனர். நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்தி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் பொருட்டுச் சரியாக வழிநடத்தப்படாத இந்த இளைஞர்களைச் சிலவிஷமிகள் தூண்டிவருகிறார்களெனப் பிரதமர்கூறி இந்நாட்டைச் சிறந்த ஒரு நாடாக்குவதற்கும் பெற்றோர் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டிருக்கின்றார்

## மிளகாய்ச் செய்கைப் போட்டி

மிளகாய்ச் செய்கையை விருத்திசெய்யும் நோக்கமாக உள்நாட்டமைச்சர் கிராமசேவையாளரிடையே ஒரு போட்டியை நடத்த முன்வந்துள்ளார். எந்தக் கிராமசேவையாளர் பகுதியில் கூடுதலான பரப்புக் காணியில் மிளகாய் செய்கை பண்ணப் படுகிறதோ அந்தக் கிராமசேவையாளருக்குச் சன்மானம் வழங்கப்படும். இது விஷயமாய் யாழ். அரசாங்க அதிபர் சகல காரியாதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தி வருகின்றார்.

## இராணுவ பாதுகாப்பு

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக இராணுவப்படை, கடற்படை, விமானப்படையாகிய முப்படைகளையும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சேவைக்கு அழைத்திருக்கின்றார். பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் மூன்றுவது பிரிவின்கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் நாட்டின் கேந்திர நிலையங்களையெல்லாம் சென்ற திங்கட்கிழமை முதல் இராணுவத்தினர் காவல்செய்து கண்காணித்து வருகின்றனர். இச்சட்டத்தின்கீழ் இராணுவப்படைக்கும, கடல், தரை, விமானப்படைக்கும் பொலிசாருக்குள்ள அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனம், வானொலி உபநிலையங்கள், எண்ணெய்ச் சேகரிப்பு நிலையங்கள், பண்டகசாலைகள், போக்குவரத்து நிலையங்கள் ஆகியன காவல் செய்யப்பட்டுவருகின்றன.

## மூவாயிரம் ஆசிரியர்கள்

55 வயதுடைய அரசாங்க ஊழியர்கள் கட்டாயமாக இளைப்பாற வேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட புதிய பிரமாணப்படி சென்ற 1970ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் 31ஆம் திகதியன்று 3,000 ஆசிரியர்கள் இளைப்பாறிய காரணமாக பாடசாலைகளிலே ஆசிரியர்களின்தொகை திடீரெனக் குறைவுபடலாயிற்று. அதனால் பாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாது திண்டாடுகின்றன. சில பாடசாலைகளிலே அவற்றின் அதிபர்கள் கீழ்வகுப்புகளை நடத்துமாறு மேலவகுப்புமாணவர்களை நியமிக்கவேண்டியிருக்கிறார்கள். கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 700 ஆசிரியர்கள் இளைப்பாறியிருக்கிறார்கள். அதனால் கல்வி அமைச்சு இந்த மாதத்திலே 2,500 ஆசிரியர்களை நியமிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறது.

## நேரடியாக வாங்கப்படும்

வெங்காயம், மிளகு, உருளைக்கிழங்கு, கமிகு, பழப்புளி, கொரககாபபுளி உட்படப் பல விதமான உணவுப் பொருட்களையும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்வனவுசெய்யக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் முடிவுசெய்துள்ளது. வர்த்தக அமைச்சின் உத்தரவின் பேரிலேயே அது இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

## ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை

இடமாற்ற உத்தரவுபெறும் ஆசிரியர்கள் இடமாற்ற உத்தரவு கிடைத்ததும் புதியபாடசாலைகளுக்கு உடனடியாகப் போகாதிருக்குமிடத்து, அவர்கள் தங்கள் பதவிகளைத் துறந்தவர்களாகவேகருதப்படுவார்களென்று கல்விமந்திரி எச்சரித்திருக்கின்றார். சிலபாடசாலைகளிலே குறைவாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; இந்தக் குறையைப் போக்குமாறே அதிகமான ஆசிரியர்களுள்ள பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் குறைவாகவுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றஞ்செய்ய முடிவு செய்யப்படலாயிற்று.

## கடலேரித் திட்டம்

1947ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டதும், செலவுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம பூர்த்திசெய்யாமல் அரைகுறை வேலைகளுடன் கைவிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம்ஒன்று யாழ்ப்பாண அரசாங்க செயலகததில் நடந்த உயர்தர அதிகாரிகளின் மகாநாட்டில் நிறைவேறியிருக்கிறது. இரணைமடுவிலிருந்து ஆனையிறவுக் கடலேரிக்கூடாக வடமராட்சி உள்நாட்டுக்கடல் வழியாய்த் தொண்டமானாறு, அரியாலையாகிய இடங்களுக்கு நன்னீர் வரப்பண்ணுவதே யாழ்ப்பாணக் கடலேரித்திட்டமாகும்.

## நுவரெலிக் குதிரைப் பந்தையம்

பல வருடங்களுக்குப் பின் நுவரெலியில் மீணடும் குதிரைப் பந்தையம் நடைபெறவிருக்கிறது. நுவரெலி மாநகரசபையின் ஒத்துழைப்பைப் பெற்று இலங்கை ரேஸ்கிளப் அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. வருகிற சித்திரை மாதத்திலே இது நடைபெறும்.

## அவசரகால நிலைமை

நாடுமுழுவதும் சென்ற 16-ந் தேதி செவ்வாய்க்கிழமைஇரவு 6மேணிமுதல் அவசரகால நிலைமையை அரசாங்கம் பிரகடனஞ் செய்துள்ளது. நாட்டின் அமைதிக்கும், சமாதானத்துக்கும் பாதகம் விளைவிக்கும் நோக்கத்துடன் சில தீயசக்திகள் தலைகாட்டியிருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

## தடைசெய்யப் பட்டிருப்பன

அவசரகாலநிலைமை பிரகடனஞ்செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துதல், பகிரங்க இடங்களில் கூடியிருத்தல், உணவுப் பொருள் வழங்குவதைத் தடுத்து நிறுத்துதல், துறைமுக வேலைகளைத் தடுத்துநிறுத்துதல்ஆகியன தடைசெய்யப் பட்டிருக்கின்றன. சந்திகள், பாதைகள் உட்படப் பொதுவான இடங்களில் கூடிநிற்பவர்களைக் கைதுசெய்து விசாரணை நடத்தவும், தடுத்து நிறுத்தவும் முப்படைகளுக்கும் அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது.

## மிளகாயும் வெங்காயமும்

பிறநாடுகளிலிருந்து மிளகாயையும், வெங்காயத்தையும் இறக்குமதிசெய்ய அரசாங்கம் பிறநாடுகளுக்கு வருடம் ஒன்றுக்கு 6கோடிரூபா கொடுக்கின்றது; எமது நாட்டுமக்கள் இவைகளைச் செய்கைபண்ணினால் இந்த 6கோடிரூபாவும் அவர்களுக்குக் கிடைக்கும் அல்லவா? வடபகுதிவிவசாயிகளின் நலன்கருதியே மிளகாய், வெங்காயத்தின் உத்தரவாதவிலையை உயர்த்தியிருக்கிறோமென்று நிதிமந்திரி கூறுகின்றார்.

## மிளகாய்ச் செய்கைக்குச் சலுகை

வீட்டுத் தோட்டங்களில் மிளகாய்செய்கைபண்ணுவோருக்கு மிளகாய்க் கன்றுகளையும், அவற்றிற்குத் தேவையான பசளை ஆகியவற்றையும் குறைந்தவிலையில் வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது. மிளகாய்ச் செய்கையில் ஈடுபடும வீட்டுச் சொந்தக்காரருக்கு வைக்கமளிக்கு முகமாகவே 'பொலிதீன்' உறைகளில் மிளகாய்க் கன்றுகள், மற்றும் தேவையான பசளை ஆகியவற்றைப் போட்டுக் குறைந்தவிலையில்— அதாவது 4ரூபா 50சதவீதம் விற்பனைசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## உணவுக் கட்டுப்பாடு

உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைமீறுவோருக்குக் கூடிய தண்டனைவிதிக்க மந்திரிமார் முடிவுசெய்திருக்கிறார்கள். அங்ஙனம் மீறுவோருக்கு 5,000 ரூபாவுக்கு மேற்படாத அபராதம் அல்லதுஒருவருடத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனை அன்றேல் இருவித தண்டனைகளும் விதிக்கப்படும்போல் இருக்கிறது.

## செயற்கைச் சுரங்கம்

மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதற்கென்று 40கோடி ரூபாசெலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டத்தின் முதற்கட்ட வேலைகள் அதிகம் துரிதமாக நடைபெற்று வருகின்றன. பொல்கொலையில் ஆரம்பிக்கப் பட்டுள்ள இத்திட்டத்திற்கெனத் தோண்டப்பட்டுவரும் சுரங்கத்தில் இதுவரை சுமார் 26,000 அடி தோண்டப்பட்டுள்ளது. அன்றுஇதனைப் பார்வையிடச்சென்ற நீர்ப்பாசன மந்திரி அதனுள 3,100 அடி வரை சென்று திரும்பினர். இதேசுரங்கத்தின் மறுபுறத்தில் உக்குவலையிலிருந்து தோண்டப்படும் பகுதியும் 1,100 அடிவரை தோண்டப்பட்டுள்ளது.

## புதிய டக்றர்மாரின் நியமனம்

புதிதாக நியமனம்பெறும் டக்றர்மாரெல்லாம் அநேகமாக நகர்ப்புறங்களிலேயே வைத்திய சேவையாற்றவிரும்புகின்றனர். அதனால கிராமப்புற மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கிராமப்புற ஆஸ்பத்திரிகளில் இப்போது பதிவு செய்யப்பட்ட அப்போதிக்கரிமாரே பொறுப்பாயிருந்து வைத்தியசேவை ஆற்றுகின்றனர். அதனால் புதிதாக நியமனம்பெறும் டக்றர்மார் இனிமேல் பின் தங்கிய கிராம ஆஸ்பத்திரிகளிலேயே முதன்முதலாகக் கடமையாற்றக் கட்டாயப் படுத்தப்படவிருக்கிறார்கள்.

## போதிய உப உணவுப் பொருட்கள்

சீனி, உப்பு, மிளகாய் ஆகிய உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு உண்டாயிருப்பதாகச் சொல்லப்படுவதில் உண்மை எதுவுமில்லை; ஒருவருடத்துக்குத் தேவைப்படும் சகல உப உணவுப் பொருட்களும் அரசாங்க பண்டகசாலைகளில் இருக்கின்றனவென்று நிதிமந்திரி தெரிவித்திருக்கின்றார்.

## பாடசாலை மிளகாய்ச் செய்கை

நாடுமுழுவதிலுமுள்ள சகல பாடசாலைகளிலும் மிளகாய்ச் செய்கை இயக்கம்ஒன்று ஆரம்பமாகவிருக்கிறது. கல்விமந்திரி விடுத்த உத்தரவின் பேரிலேயே இது நடைபெறவிருக்கிறது.

## படித்த வாலிபருக்கு நிலம்

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களுக்கு வின்வமடுவில் காணி வழங்குவதற்கான காணிக்கச்சேரி வருகிற சித்திரைமாதம 18ஆம் தேதி முதல் நடைபெறவிருக்கிறது. மேட்டுநிலமான இக்காணிக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசிதினம இந்தப் பங்குனிமாதம் 31ஆம் தேதியாகும். 18வயதுக்கும், 30வயதுக்கும் இடைப்பட்ட 300பேருக்கு ஆளுக்கு மூன்று ஏக்கர்வீதம் இத்திட்டத்தின்கீழ் காணிவழங்கப்படும். விண்ணப்ப மாதிரிப் பத்திரங்கள் தமிழரசுக்கட்சித் தலைமைக் காரியாலயத்தால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

## விவசாயப் படையினருக்கு வேலை

விவசாயப்படை கலைக்கப்படுவதற்குமுன் அப்படையிலே 600காட்களுக்குக் குறையாமல்சேவைசெய்து, நற்சாட்சிப் பத்திரம் பெற்றுள்ளோருக்குப் பிரதேச பொறியியல சேவைப் பிரிவுகளில் வேலைவசதி அளிக்கப்படுமென நீர்ப்பாசன-மின்சக்தி-பெருந்தெரு மந்திரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா தெரிவித்திருக்கின்றார். 600 நாட்களுக்குக் குறையாமல் வேலை செய்தோருக்கு அந்தந்தத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரின் அத்தாட்சியுடன் வேலை வழங்கப்படுமென்றும், சேவைகாலத்தில் அவர்கள் காட்டிய திறமை பற்றியும் வேலைவழங்குமுன் ஆராயப்படுமென்றும் மந்திரி அறிவித்திருக்கின்றார்.

## போத்தல்களில் இளநீர்

இளநீர், தேநீர் ஆகியவற்றைப் பதப்படுத்திப் போத்தல்களில் அடைத்து விற்பனை செய்ய இலங்கை விஞ்ஞான கைத்தொழில் நிறுவனம் முன்வந்திருக்கிறது. மேலும் வர்த்தக அமைச்சின் உதவியுடன் இவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## படித்த வாலிபருக்கு வேலை

யாழ்ப்பாண மாவட்டத்திலே படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களுக்கு உப உணவுப் பயிர்களைச்செய்கைபண்ணுவதற்கென்று காணிகள் வழங்கப்படவிருக்கின்றன விஸ்வமடுத் திட்டத்தில் 1,000 வாலிபர்களுக்கும், திருவையாற்றுத் திட்டத்தில் 500 வாலிபர்களுக்கும், ஐயன்கான் திட்டத்தில் 600வாலிபருக்கும் தனித்தனியே மூன்று ஏக்கர்காணி வழங்கப்படும்.

# கெத்சமனி எழில் வனம்

ஆசிரியர் F. S. C. வங்காலை

பூவினும் மேலான அழகில்லை; காவினும் உயர்வான எழிலில்லை; கனியினும் இனிமையான சுவையில்லை, பூவினும் கனியினும் அழகினும் பொலிந்து விளங்கும் ஏதேன் என்னும் பெயருறும் சிங்காரத் தோட்டம், தீவினை புரியும் அலகையின் ஆட்டம், தீங்கனியில் ஏவாளின் நாட்டம் ஆகிய தீமைகளுக்குப் பலியாகிச் சீரழிந்து, அழகிழந்து, இருளடர்ந்து, பைங்கண் அரவின் உறைவிடமாய் இருந்தது.

பூங்காவிலே இறைவனின் மேலான படைப்புக்குத் தீங்கு ஏற்பட்டு அங்கண் அழிவு ஆரம்பமாயதால், தேவ அருள் நிலையை இழந்து அலகைக்கு அடிமையாகி மனிதன் மீளாத நரகிற்கு ஆளாகும் தீமையினின்று இரட்சிக்க, ஜெத்சமனிப் பூங்காவில் மனித ஈடேற்றத்தை ஆரம்பிக்க, அப்போஸ்தலர்



களோடு பாஸ்காவை அருந்தியபின், அசனசாலையினின்றும் நீங்கிப் பால்நிலா பொழியும் பௌர்ணமிநாளன்று பிரிய நண்பர்களுடன் ஜெத்சமனிப் பூங்காவை நோக்கி யேசு சென்றார்.

ஆலயப் பாறையின் அருகிலோடும் மருண்ட, இருண்ட பாதைவழியே கீதான் நதியின் காய்ந்த படுக்கை; இருமருங்கும் ஓடைகள்; நிழல் பரப்பும் அடர்ந்த மரங்கள்; உடைந்த பாறைகள்! ஆழக் கிடங்குகள்; பன்முறையும் யேசு இவ்வழியே பயணம் சென்றிருந்தார்; அப்போஸ்தலர்களோடு இவ்வழிச் செல்லும் இத்தருணத்தில் அவரது உணர்ச்சிகள் பற்பல; குரலிலும் கனிவான தொனியில்லை; திருமுகத்தில் விகாரமான பயக்குறிகள்; கதிரவன்போன்று ஒளி வீசும் கமல முகத்தில், சோகம், கலக்கம்; துயரமிகுதியால் நெகிழ்ந்தபார்வை; வான்மீன்களிடையே செல்லும் வெண்பாறைபோல், ஒளி வீசும் அவரது விசாலமான நெற்றியில் மேகத்திரள் வந்து குவிந்ததுபோலும் மங்கிய ஒளி; இத்தகைய மாற்றங்களைக் கண்ணுற்ற அவரது பிரிய நண்பர்கள் ஆறுதல்மொழி கூறுவது எவ்வாறு என்று அறியாதவர்கள் போன்று அவருடன் தயங்கித் தயங்கிச் சென்றனர்.

உயர்ந்த ஒலிவ மரங்கள் நிறைந்த ஜெத்சமனிப் பூங்காவை அண்மியதும், "எனது பிதாவைப் பிரார்த்தனை செய்துகொண்டு மீண்டும் வரும்வரை நீங்கள் இங்கே தங்கி இருங்கள்" என்று அப்போஸ்தலர் எண்மருக்குக் கூறினர். தமது பெருமை முழுவதையும் அறியாத அவர்களுக்கு யேசுவின் கலக்கம் அளவுமீறிய வேதனையை வருவிக்கும் ஆதலால் நேசம்மிகுந்த யேசு அப்போஸ்தலர்களுக்கும் கிலேசத்தையூட்ட அற்பமேனும் விருப்பமில்லாதிருந்தார்.

இராயப்பரையும், யாகப்பரையும், அருளப்பரையும் அழைத்துக்கொண்டு சிறிது தூரம் சென்றபின்னர், "இங்கிருந்து செபம் செய்யுங்கள்" என்று மூவரையும் விட்டுவிட்டு ஒரு கல்லெறிதூரம் சென்று தோட்டத்தினுட் கற்றரையில் முழந்தாளிலிருந்து—திருக் கரங்களை விரித்து வானத்தை அண்ணார்ந்து பார்த்து: "என் ஆன்மா மரணம்வரையும் துக்கக்கடலில் அமிழ்ந்திருக்கிறது" என்று திருமுகத்திற் சோகம் ததும்ப தேகம் நடுங்கப் பிரலாபித்தார். அவ்வமயம் தலையசைய, உடல் நடுங்கச் சரிந்து முகம் குப்புற விழுந்தார்.

மனிதசுபாவத்தில் நாம் துயருறும்வேளை மற்றோரின் துணையை நாடுவது போன்று நேச யேசுவும் அவ்விடத்தை விட்டகன்று பிரிய நண்பரை நாடிச்சென்றார். அவர்கள் கண்ணயர்ந்து தூங்குவதைக் கண்ட யேசு துக்கித்து, தூக்கம் தெளிந்தெழுந்த நண்பரை அன்புடன் நோக்கி; "ஒருமணி நேரமாவது என்னுடன் விழித்திருக்க உங்களால் முடியாது போயிற்றோ? என்று கூறித் தமது துக்கத்தைச் சற்று மறந்து அவர்களது ஏழை நிலையை உணர்ந்து "சோதனையில் அகப்படாதபடி விழித்திருந்து செபியுங்கள்" என்று புத்திமதி கூறினர். பின்னர் நண்பர்களை விட்டகன்று மீண்டும் தமது இருப்பிடம் சென்றார்.

பயம் நிறைந்த பார்வை, நாலாபக்கமும் துணை தேடிக் கலங்கும்நிலைமை; பயம் நிறைந்த இந்த நிலையிற் கண்களை மேலே உயர்த்திப் பிதாவின் உதவியை நாடிப் "பிதாவே! கூடுமானால் இந்தக் கசப்பானபாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவதென்று வேண்டிக்கொண்டார்.

ஆயிரம் ஆயிரம் ஈட்டிகள் போன்ற துக்கமும் துயரமும் யேசுவின் நெஞ்சத்திற் பாய்ந்ததினால், ஆறுதல் தேடி மீண்டும் தமது நண்பர்களை நாடிவந்தார். அவர்கள் தூங்குவதைக்கண்டு மிகுந்த துயரமுற்றார். பின்னர் அவர்களை நோக்கி "விழித்திருந்து செபியுங்கள், ஆன்மா சுறுசுறுப்புள்ளது மாமிசமோ பலவீனமுள்ளது" என்று நன்மதி புகன்றார். மூன்றும் முறையும் தமது இருப்பிடம் சேர்ந்து இனிமேல் ஏற்படவிருக்கும் பயம், கசப்பு, துக்கம், அருவருப்பு, அரோசிகம், ஆதியவற்றைத் தாங்கவியலாது, "பிதாவே! பிதாவே!! கூடுமானல் இந்தக் கசப்பான பாத்திரம் என்னை விட்டு அகலக்கடவது; ஆயினும் எனது மனதின்படியன்று உமது சித்தத்தின்படியே ஆகட்டும்" என்று பரிவுடன் பிரார்த்தித்தார்.

நாம் அனுபவிக்கவிருக்கும் துக்கம், கஸ்தி, வருத்தம், தீமைகள் யாவும் யேசுவுக்கு அதிக பற்றை ஊட்டியதால் அவரது இரத்தமெல்லாம் உருண்டு, புரண்டு இருதயத்தை நோக்கி ஓட இதய கமலம் இரத்தத்தால் மூழ்குவிக்க, வெயர்வைத் துவாரங்களின் வழியாகத் திரு இரத்தம் வெளியேற, யேசு மரண அவஸ்தையுற்று மூர்ச்சித்துத் தரையில் விழுந்தார். இத்தகைய பயம் நிறைந்த துயருழன்ற நிலையிற்றான், பரம தந்தை யேசுவுக்கு ஆறுதல் அளிக்க வானதூதர்களை அனுப்பினர். யேசுவின் அருகில் வந்த வானதூதன் புனிதமுறும் மெல்லிய ஆடையினால் யேசுவின் இரத்தம் தோய்ந்த கமல முகத்தை அழகொளிரத் துடைத்து, வான்தந்தை புகன்ற ஆறுதல் மொழிகளையும் பகர்ந்து மலரடி தொழுதுநின்றான்.



வானவன் உரைத்த வார்த்தைகளால் உள்ளம்தேறி அமைதிநிலவ, ஆண்டவர் அருமைநண்பர்களிடம் எழுந்தருளி, "எழுந்திருங்கள் செல்வோம்; என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் இதோ! அருகில் வந்துவிட்டான்" என்று இன்னுரை புகன்று ஜெத்சமனித் தோட்டத்தின் வாயிலை நோக்கிச் சென்றார்

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

# திருத்தந்தை பேசுகின்றார்

அன்று 1970ஆம் ஆண்டு பங்குனிமாதம் 19ஆம் திகதி புனித சூசையப்பர் திருநாள். அன்றைய தினமும் பகல் மதியவேளை திருத்தந்தை சின்னப்ப பாப்பரசர் வத்திக்கான்மாளிகை மேன்மாடியிலே தமது படுக்கைச் சன்னல்முன்பாக வழமைபோல் காட்சியளிக்கின்றார். கீழே சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்தில் குழுமிநின்ற பெருந்திரளான மக்களுடன் எப்போதுமபோல் திரிகாலச் செபம் சொல்லுமுன் திருச்சபையின் பாதுகாவலரான புனித சூசையப்பர் தமது அடைக்கலத்தில் வைத்துப் பாதுகாத்தருள வேண்டுமென்று உணர்ச்சிததும்ப அவரை நோக்கி உருக்கமாக வேண்டுதல் செய்கின்றார். அதன்மேல் திரிகாலச்செபம் சொல்லி முடித்துவிட்டுப் பேசுகின்றார்.

எக்காலத்திலும் பார்க்க இக்காலத்தில் நாம் சூசையப்பரின் பாதுகாவலை அதிகமதிகமாக இரந்து கேட்கவேண்டும், சுவிசேஷமாகிய நற்செய்தியிலே, அவர் யேசுவுக்கும், மரியாய்க்கும் ஆற்றிய அரும் பணி யாது? அவர்களைப் பாதுகாத்ததும், தற்பாதுகாப்பு அளித்ததும்விழிப்பாகக்காவல் செய்ததும், போஷித்துப் பராமரித்ததுமாகிய பெரும்பணியே. நமது இரட்சகராகிய கிறிஸ்துநாதருடைய— மனுஷீகத்துடனே இருந்து தமது இரட்சிப்பின் வேலையை காலவரையறையின்றிக் காலக்காலமாய் ஆற்றிவருகின்ற கிறிஸ்துநாதருடைய—ஞானச் சரீரமாகிய திருச்சபைக்குத் தாழ்மையும், மேன்மையும், இரகசியத்தையும் படைத்த இந்தப்புனிதர் சிறப்பாக ஆற்றிவரும் பணியைப் பின்னரும் தொடர்ந்து ஆற்றிவர வேண்டுமெனத் திறம்பாத நம்பிக்கையோடு நாம அவரை மன்றாடி வரவேண்டும்.

சுவிசேஷ நற்செய்தியிலே, தமது பாலியப் பிராயத்தில் கிறிஸ்துநாதர் பாதுகாக்கப்பட்டது போன்று திருச்சபை நற்காக்கப்பட வேண்டியதாய், வறுமைப்பட்டதும், சலியாது கஷ்டப்பட்டு உழைத்ததுமான திருக்குடும்பத்தின் பாடசாலையில் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டியதாய்—ஆனால், ஊக்கத்தோடும், உணர்ச்சிவேகத்தோடும் தனது உரிய பணிக்குரிய அழைத்தலை உத்தமமேதையாய் நிறைவேற்றிவரக்கூடியதாய் இருக்கவேண்டியதன் அவசியத்தை அது இன்று கொண்டிருக்கின்றது.

பிறரால் தீங்கிழைக்கப்படாது இருப்பதற்கும், அனைத்துலகிலும் முன்னிலும் பன்மடங்கதிகமாய்த் தன்னிஷ்டம்போல் தொண்டாற்றி வருவதற்குமாக அது பாதுகாப்பை வேண்டி நிற்கின்றது. இந்தப் பாதுகாப்பு எந்தக்காலத்திலும் பார்க்க இந்தக் காலத்திலே எத்தனை அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதை நாம் கண்கூடாகக்கண்டு வருகின்றோம். அதனால் உபத்திரவப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும், சந்தேகிக்கப்படுவதும், அவநம்பிக்கை கொள்ளப்படுவதும், மனங்கொண்டு ஏற்றுக்கொள்ள மறுக்கப்படுவதுமான திருச்சபைக்குச் சூசையப்பரின் பாதுகாவலை இன்று ஏன் அதிகமாக இரந்து கேட்கவேண்டுமென்பது இனிதே புலனாகின்றது.

நாம் சூசையப்பரை இரந்து கேட்பது மட்டும் போதுமானதன்று, அவரைக் கண்டுபாவிக்கவும் ஆனமட்டும் பிரயாசைப்படவேண்டும். தமது இல்லத்திலும், குடும்பத்திலும சாதாரண வறிய தொழிலாளி ஒருவரால் தாம் பாதுகாத்துப் பரிபாலிக்கப்பட வேண்டுமென்ற கிறிஸ்துநாதர் விரும்பியதுபோல நமது இல்லங்களிலும், குடும்பங்களிலும், தொழில்துறைகளிலும் தாமும், தமது பெயரும் பாதுகாத்துப் பரிபாலிக்கப்பட வேண்டுமென அவர் விரும்புகின்றார். இதற்கு நாம் செய்ய வேண்டியது, நமது இல்லங்களிலும், குடும்பங்களிலும், தொழில் துறைகளிலும் கிறிஸ்தவனென்ற நாமத்துக்குப் பங்கம் ஏற்படாது, களங்கம் உண்டுபடாது புனிதமாக அதனைப் பேணிப்பாதுகாப்பதும், ஜீவனைக் கொடுத்தாலும் அதைமேன்மைப்படுத்துவதுமேயன்றிப் பிறிதொன்றுமல்ல. அப்பொழுது சூசையப்பர் ஆற்றிய திருப்பணி நம்முடையதாகி நம்முள்ளும், நம்மைச் சூழவரவும் கிறிஸ்துநாதரைப் பாதுகாத்து, வளர்ச்சிபெறச் செய்கிறவர்களாவோம்.

இன்னும், நியாய முறைப்படி, நமக்கு அதிகம் முக்கியமும், அருமையுமான மற்றொரு விசேடப்பட்ட சிந்தனைக்கு நாம் திரும்புகிறோம். அகிலமுழுவதிலுமுள்ள கிறிஸ்தவ தொழிலாளர்களைப் பற்றியதே அதுவாகும். அவர்கள் தங்களை ஆதரித்துக் காப்பாற்றவும், ஆசீர்வதிக்கவும், தங்கள் இல்லங்கள், குடும்பங்கள், தொழில்துறைகளிலே கிறிஸ்துநாதரின் திருநாமத்தில் விசுவாசமாயும், உறுதியாயும், பிரமாணிக்கமாயும் இருந்துவரத் தங்களை ஆக்கிவைக்கவுமாகத் தங்கள் பரிசுத்த பாதுகாவலரான சூசையப்பரின் அடைக்கலத்தை இரந்து கொள்ளவேண்டுமென்று அனைவருக்கும் சிபாரிசுசெய்ய ஆசிக்கின்றேம்.

# இளைஞர் உலகு



## அன்புச் சோதரர்க்கு!

இன்று எங்குபார்த்தாலும் நூல்களும் சஞ்சிகைகளுமே நம் கண்முன் காட்சியளிக்கின்றன. அவை எல்லாம் உருவத்திலும் அமைப்பிலும் அப்படித் தோன்றுகின்றன. ஆனால் எல்லாம் அல்ல. அட்டைகளை அழகுபடுத்தி அடுக்குமொழியில் துடுக்குநடையில் ஆபாசப்படங்களுடன் வெளிவருவனவற்றை நூல்கள் சஞ்சிகைகள் என்று கூறலாமா? இல்லவே இல்லை.

எந்தநூல் நமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து உறுதியையும் தந்து எம்மை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்லுகிறதோ அதுதான் மேலான நூலாகும். இளைஞராகிய எம்மை தப்பான வழியில் இட்டுச்செல்ல காத்திருக்கின்றன எத்தனையோ நூல்கள். ஒருவன் ஏழையாயிருந்தும் உயர்தரத்தவருடன் உறவாட இயலாதிருப்பினும் நன்னூல்கள் மூலம் அரண்மனையில் வாழலாம், அரசர்களுடன் உறவாடலாம், உலகப் பெரியார்களுடன் உறவாடலாம். இதைப் படித்ததும், அப்படியானால் எத்தகைய நூல்களை நாம் படிக்க வேண்டும்? என்ற கேள்வி உங்கள் மனதில் எழத்தான் செய்யும். பெரியோர், ஆசிரியர், குருக்கள் ஆகியோர் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றனர். எனவே வாழ்க்கையில் ஆக்கம்பெற நல்ல நூல்களைப் படியுங்கள்.

அன்புள்ள சோதரன்.

## வாழ்வாங்கு வாழ

கடமையைச் சரிவரச் செய்பவர்கள் அதற்குரிய பரிசைப் பெறுகின்றனர். அதே போல் செய்யத் தவறியவர்களும் அதற்குரிய தண்டனையைப் பெற்றுத் தானாக வேண்டும். கடமைநம் பிறப்புடன் பிறந்து இறப்புடன் முடிவடைகிறது. நம் பொறுப்புகளை நமக்கு அறிவுறுத்தி நல்லவற்றைச் செய்யுமாறு தூண்டி தீயவற்றை விலக்கச் செய்கிறது. யார் தன்னை மக்களுக்கு அர்ப்பணம்செய்து கொள்ளுகிறரோ அவனே உலக அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவன்.

ஒரு நாளிரவு நெப்போலியன் சாதாரண உடையில் படைகளைப் பார்வையிடச் சென்றான். ஓரிடத்தில் காவற்காரன் நெப்போலியனைப் போகவிடாது தடுத்தான். அப்போது நெப்போலியன் 'நான் ராணுவஅதிகாரிபடைகளைப் பார்வையிட வந்தேன். என்னை உள்ளேவிடு' என்று கூறவும் காவற்காரன் 'யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது; இதுதான் எனக்கிடப்பட்ட உத்தரவு. மீறிச் சென்றால் என் துப்பாக்கிக்கு இரையாக வேண்டியதுதான' என்று கூறினான். நெப்போலியன் இதைக்கேட்டு பெருமகிழ்ச்சியுற்று அடுத்தநாளே அவனுக்குப் பதவி உயர்வளித்தான்.

கடமை என்பது நல்லவற்றைச் செய்வது மாத்திரமல்ல தீயவற்றை எதிர்த்துப் போராடுவதும் கடமை. அப்படியானால் தான் நல்லவற்றைக் காப்பாற்ற முடியும். ஏனையோரின் துன்பங்களை நீக்குவது மட்டும் நமது கடமையல்ல, அவர்கள் துன்பப்படாமல் நடந்துகொள்வதும் நமது கடமையாகும். நன்மை தீமையை பிரித்தறியும் தன்மையே நம் கடமையைச் செய்ய வழிவகுக்கிறது. கடமைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது தான் நாகரிக வாழ்வின் சிகரம். எவன் தன் கடமையைச் சரிவர ஆற்றுகிறானோ அவன் மக்களால் என்றும் மதிக்கப்படுவான்.

—திராட்சையூரான்.

### உங்களால் முடியுமா?

**விடைகள் :**

1. வேட்டைக்குச் சென்றவர்கள் :

தகப்பன் —மகன், தகப்பன் மகனாகவும் அதே நேரத்தில் தந்தையாகவும் இருக்கிறார்.

2. முதன் மந்திரி முதலில் எடுத்த காகிதத் துண்டை கிழித்து எறிந்தார். மிகுதியாய் இருந்த மற்ற துண்டில் "போகலாம்"என்று இருந்தபடியால் முதன் மந்திரி கிழித்தது "இருக்கலாம்" ஆக இருக்கவேண்டும் என நீதிபதி தீர்மானித்தார்.

தகவல் : ரி. ஆர்.

குழந்தை : இல்வாழ்வின் செல்வம் குழந்தை. எல்லாமிருந்தும் இதுமட்டும் இல்லை என்றால் வாழ்வு உப்பற்ற பண்டம்.

* * *

அறிவாளி : அறிவாளியாக விரும்பினால் நாவை அடக்கு அறிவைப் பெறுவாய்.

## சிறுகதை

# பட்டமளிப்பு!

(—காவலூரான், கொட்டாஞ்சேனை)

வழமைபோல் காலை ஆறு மணிக்கு எழுந்த யோண் பாடப் புத்தகங்களை யெடுத்துப் படித்துக்கொண்டிருந்தான். அன்று ஏனோ படிப்பு அவனை ஆட்கொள்ளவில்லை. புத்தகங்களை ஒரு புறத்தில் வைத்துவிட்டுப் பற்களைத் தேய்த்துக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றான்.

யோண், அருளப்புவிற்கும், பாக்கியத்திற்கும் உரிய ஒரே புத்திரன். என்றாலும் தனது கல்வியில் கெட்டிக்காரன். யோண் யாழ்ப்பாணத்தில் முன்னணியிலிருக்கும் கலவன் பாடசாலையில் பயின்று வந்தான்.

அன்று பாடசாலை அதிபர், பாடசாலை இலக்கியமன்ற நிர்வாகக் குழுவினரைத் தெரிவுசெய்ய நியமனப்பத்திரங்களை வெளியிட்டார். யோணைக் காரியதரிசியாக நியமிக்க வேண்டுமென்ற நோக்குடன், அவனுக்குத் தெரியாமல் அவனது வகுப்பு மாணவர்கள் அதிபரிடம் சென்று நியமனப் பத்திரத்தைப்பெற்று யோணின் பெயரையும் அவனை ஆமோதிப்பவர், வழிமொழிபவர் ஆகியோரின் பெயர்களையும் எழுதி, யோணிடம், அவனது கையொப்பத்தைப் பெற நியமனப்பத்திரத்தைக் கொண்டு சென்றனர். யோண் இதனை எதிர்க்கவே வகுப்பு மாணவர்கள் அவனை விட்டுவிடவில்லை. போட்டியிட்டே தீரவேண்டும் என்று தொல்லை கொடுத்தனர்.

சகமாணவர்களின் தொல்லைகளைப் பொறுக்க இயலாத யோண் அதற்குடன்பட்டுத் தனது கையொப்பத்தை நியமனப் பத்திரத்தில் இட்டான். நியமனப்பத்திரம் அதிபரின் காரியாலயத்திற்குச் சென்றது. யோணுடன் கலா என்ற மாணவியும் போட்டியிட்டாள். தேர்வு நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. வகுப்பு மாணவர்கள் யோணைத் தெரிவு செய்யும்படி தாள்களில் அவனது பெயரை எழுதிப் பாடசாலை முழுதும் வினியோகித்தனர். அன்று தேர்தல் தினம். ஒன்பதாம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள் வாக்கெடுப்பில் பங்கு கொண்டார்கள். வாக்கெடுப்பு ஒருவாறு முடிவடைந்தது. வாக்குகளை எண்ணிய பொழுது யோண் நாற்பத்தெட்டு அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தான்.

பாடசாலை இலக்கியமன்ற ஆட்சிக்குழுவினர் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவராகச் சேகரும், உப-தலைவராக மாணிக்கமும், காரியதரிசியாக யோணும், உப-காரியதரிசியாக கலாவும், பொருளாளராகச் சந்திராவும், நான்கு செயற்குழு அங்கத்தவர்களாகக் கனகம், சந்திரன், நிர்மலா, வனஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்களெல்லோரும் உத்தியோக பூர்வமாக அதிபரால் அறிவிக்கப்பட்டனர். யோண் காரியதரிசி என்ற செய்தி கேட்ட அவனது வகுப்பு மாணவர்கள் சந்தோஷத்தால் மகிழ்ச்சிக் குரலெழுப்பினர்கள்.

மாசி மாதம் இருபத்தொராம் திகதி மாலை ஐந்துமுப்பது மணியளவில் பாடசாலை இலக்கிய மன்றத்தினரின் விழா வெகு விமரிசையாக யாழ். நகரசபை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். ஏராளமானமக்கள் விழாவிற்குச் சமுகமளித்திருந்தார்கள்.

மன்றத்தலைவர் சேகர் தமது தலைமையுரையில்: "மாணவர்களாகிய நாம் முதன்முதலாக இப்படியொரு விழாவைக் கொண்டாடுவது எமது பாடசாலைச் சரித்திரத்திலேயே முக்கிய அம்சமாகும். ஆனால் மாணவ, மாணவியர் இன்று உங்களுக்கு இன்னிசை விருந்துடன், நாடகமொன்றும் அளிப்பார்கள். இந்நேரத்தில் ஒன்று உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்: அதாவது மாணவ, மாணவியரான நாம் முதன் முதல் மேடையேற்றவிருக்கும் நாடகத்தில் குறைகள் பல இருக்கலாம். எனவே, நாம் மேடையேற்றவிருக்கும் நாடகத்தைத் தரமான நாடகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம்" என்று கூறித் தமது பேச்சை முடித்தார். கைதட்டலும், கரகோஷமும் வானைப்பிளந்தன.

அடுத்துப் பிரதம அதிதி அவர்கள் தமது உரையில்: "பாடசாலைகள் தமிழை வளர்க்க விழாவெடுப்பதைக் காண எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிற"தென்றார். அவர் மேலும் பேசுகையில் "மாணவ, மாணவிகள் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை இப்படியொரு விழாவினுள் அடக்கி, அவ்விழாவை மேடையேற்றிச் சந்தோஷப்படுவதுபோல் நாட்டின் சுபதேவைகளைப் பாடசாலை மாணவ, மாணவிகள் வீட்டுத் தோட்டங்கள் முதலியன ஏற்படுத்திப் பூர்த்தி செய்ய முன்வரல் வேண்டும். இன்று இப்பாடசாலையின் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதையிட்டுச் சந்தோஷமடைகிறேன். இவ்வேளையில் தங்களுக்கும், இப்பாடசாலைக்கும் சந்தோஷகரமான ஒரு செய்தியை வெளியிடுகிறேன். இப்பாடசாலையில் கல்வி பயிலும் யோண் அருளப்புவிற்கு எமது காரியாலய விவசாயப் பிரிவினர் மாணவ வீட்டுத் தோட்டப் போட்டியினுதவியால் மாணவ விவசாய மன்னன் என்ற பட்டத்தைச் சூட்டவிருக்கின்றனர் என்றும், அவரது கல்விக்கு அரசாங்கம் பண உதவி செய்ய இருக்கிறதென்றும்" தெரிவித்துக்கொண்டு உரையை முடித்தார். மக்கள் சந்தோஷத்தால் கரகோஷம் செய்தனர்.

விழா முடிவடைந்தது. விழா முடிவடைந்து அடுத்த வாரத்தில் ஆட்சிக்குழுவினரின் கூட்டம் நடைபெற்றது. யோண், பொருளாளராகிய சந்திராவிடம் விழாச்செலவுகளைத் தெரிவிக்குமாறு கேட்டார். பெண்களிடம் முன்னர் கதைத்தனுபவமில்லாத யோண், எதிர்பாராதவிதமாக அக்கேள்வியைக் கேட்டார். சந்திரா யோண் கேட்ட கேள்விக்கு மறுப்புத் தெரிவிக்காமல் கணக்கை வாசித்தாள். மொத்தம் ஐந்நூற்றி ஐம்பதுரூபா செலவாகியிருந்தது. காரியதரிசியான யோண், தலைவரான சேகர், பொருளாளரான சந்திரா ஆகிய மூவரும் கணக்குக் கொப்பியில் கையொப்பமிட்டு அதை அதிபரிடம் சமர்ப்பித்தனர். கணக்கைப் பார்வையிட்ட அதிபர் விழாவிற்குச் செலவான தொகையைச் சந்திராவிடம் கொடுத்தார். விழாவிற்கு உதவியவர்கள், நிர்வாகக் குழுவினர், ஆசிரியர்களுட்பட, அந்த வார இறுதியில் பகலுணவிற்கும், திரைப்படத்திற்கும அப்பணம் செலவு செய்யப்பட்டது இந்தச் செலவுகளுக்குப் பின்னும் முன்னூற்றி இருபத்தைந்து ரூபா மிகுதியாக இருந்தது.

* * *

வீட்டிற்குச் சென்ற யோண் தனக்கு வந்திருந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தான். ஆம், அது மாணவ விவசாய மன்னன் என்ற பெயரைப் பெறுவதற்கு அரசாங்க அதிபரின் விவசாயப் பிரிவினரால் அனுப்பப்பட்டிருந்த அழைப்பிதழ். யோண் தான் படித்ததைத் தனது பெற்றோருக்குச் சொல்லத்தவறவில்லை. தமது மகனின் வார்த்தைகளைக் கேட்ட அருளப்புவும், பாக்கியமும் அடைந்த சந்தோஷத்திற்கோ அளவில்லை.

மாணவ விவசாய மன்னன் என்ற பெயர் சூட்டுவிழாவும் யாழ். நகர மண்டபத்தில் தான் இடம்பெற்றது. விழாவும் ஆரம்பமாகியது. யாழ்ப்பாணப் பாராளுமன்ற அங்கத்தவர் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். முதலாவது பரிசாகிய மாணவ விவசாய மன்னன் என்ற பெயர், ஆயிரத்து ஐந்நூறு ரூபா, கல்விச் செலவு, 1971-ம் ஆண்டுக்கான தங்கப்பதக்கம முதலானவற்றை மாணவன் யோண் அருளப்புவும், இரண்டாவது பரிசாகிய ஆயிரம் ரூபா, வெள்ளிப் பதக்கம் ஆகியவற்றை மாணவி சந்திரமதி சிவமும், மூன்றாவது பரிசாகிய ஐந்நூறு ரூபா, வெண்கலப்பதக்கம் ஆகியவற்றை மாணவன் சிவசம்புவும் பெற்றுக் கொண்டனர்.

(யாவும் கற்பனை)

### விளக்கு!

என் தேகம் எனக்கு ஒரு விளக்கு; என் உயிரே இதற்கான திரி; என் இரத்தமே எண்ணெய்; இவை அனைத்தையும் இறைவனைக் காண்பதற்காகவே நான் உபயோகிக்கிறேன். — கபீர்தாஸ்.

## யாழ்ப்பாணம் சென் வின்சென்ற் டி போல் சபை

மேற்படி சபையின் தனிச் சங்க கூட்டமொன்று இம் மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாண மேற்றிராசன இல்லத்தில் சகோதரர் எஸ். எம். ஜே. லூயிஸ் அவர்களின் தலைமையில் நடந்தேறியது. அதிவண. பிதா ஜே. புளோகானும் சமூகமளித்திருந்தார். முந்திய செயல்ாளர் ஏ. எவ். பிரான்சிஸ் ஒவ் மேரியின் இடமாக சகோதரர் ஜே. ஞானப்பிரகாசம் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். அடுத்த கால்வருடக் கூட்டம் வைகாசி மாதத்தில் யாழ். சந்தியோகுமையோர் சபைக் கூட்டத்தில் வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணம் உளவியல் சங்கம் (Psychological Society)

யாழ்ப்பாணம் உளவியல் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். சென் ஜோணைஸ் கல்லூரி நூல் நிலையத்தில் இம் மாதம் 16-ம் திகதி மாலை நடந்தேறியது.

இவ்வருடச் சங்க உத்தியோகஸ்தர் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கே. பூரணம் பிள்ளை (B. A. Lond).

உபதலைவர்: டாக்டர் கே. கதிர்காமசேகரன், M. R. C. P.; D. P. M. திரு. எஸ். எம். ஜே. லூயிஸ், முதலியார் சி. முத்துத்தம்பி,

செயலாளர்: திரு. எஸ். குமாரசாமி, M. A.

உபசெயலாளரும் பொக்கு கரும்: திரு. கே. மகேசன் „ B. A.

நிர்வாகசபை அங்கத்தினர்: சங். சிஸ்ரர் புஸ்பம், சங். சிஸ்ரர் டனியெலா, திரு. எஸ். ஆர். குமாரேசன,

கூட்டத்தின்பின் சங்கத்தின் முந்திய தலைவர் டாக்டர் ரி. அருளம்பலத்துக்கு ஒரு பிரியாவிடை உபசாரணை அளிக்கப்பட்டது. இவரின் சேவை நலனைப் பாராட்டிப் பின்வருவோர் சொற்பொழிவு ஆற்றினார்கள்: திரு. கே. பூரணம்பிள்ளை, திரு. ஜே. ரி. செல்லையா, திரு. எஸ். குமாரசாமி, திரு. கே. சேசையா, முதலியார் சி. முத்துத்தம்பி. டாக்டர் அருளம்பலம் ஒரு கனிவான சொற்பொழிவில் தமது நன்றியைத் தெரிவித்தார்.

## நன்றித் துதி

யேசுவின் திரு இருதயத்தின் உதவியாலும், மரியாயின் அன்பாலும், புனித சூசையப்பர், கைவிடப்பட்ட புனித யூதாததேயு, புனித அந்தோனியார், புனித சவேரியார், புனித ஆரோக்கியநாதர், புனித ஞானப்பிரகாசியார், சகல அர்ச்சியசிட்டர்களிடமும், புனித நித்தம்மாள் புனித பிரான்சிஸ் அசிசியாரிடமும், நான் இரந்துகேட்டமைபோல் கேட்டது கிடைக்கப் பெற்றேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கின்றேன்.

ந. எமிலி
புங்கையூர்,

## திருமலைச் செய்திகள்:

### கிறிஸ்தவ தமிழ் மன்றம்:

திருக்கோணமலையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட "கிறிஸ்தவ தமிழ் மன்றம்" எதிர்வரும் 10-4-71இல் "கிறிஸ்துவின் உயிர்ப்பை" மையமாக வைத்து பெருவிழா ஒன்றை எடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. கத்தோலிக்க, மெதடிஸ்த சமயத்தைச் சார்ந்த பல அன்பர்கள் சேர்ந்து இம்மன்றத்தை உருவாக்கியுள்ளனர்.

தலைவர்:
வண. இரத்தினராசா.

துணைத் தலைவர்:
வண. சகோ. மத்தியு, S.S J.

செயலாளர்:
திரு. எஸ். செல்வராசா.

துணைச் செயலாளர்:
தா. பி. சுப்பிரமணியம்.

மூன்றுபேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்.

### பங்குக்குரவரின் பிரிவுபசாரம்:

திருமலை-மட்டுநகர் மேற்றிராசனத் தேவாலயமாகிய புனிதமரியாள் தேவாலயத்தின் பங்குக் குருவாகச் சிறுடனும், சிறப்புடனும் நான்காண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றிய அருட்திரு. S. A. செலர் அடிகளாரின் பிரிவுபசாரவிழா முன் ஒருபோதும் இல்லாத புதிய முறையில் நடைபெற்றது.

பங்குச்சபையினர் அருட்திரு அடிகளாரின் ஆன்மீகஉடல் நலத்திற்காகப் பலிபூசை ஒப்புக்கொடுக்க ஏற்பாடு செய்தனர். அப்பலிப் பூசையில் காணிக்கை ஒப்புக் கொடுக்கும் வேளையில் பங்குமக்கள் அனைவரும் பங்குத் தந்தையருக்கும் தாம் விரும்பிய பொருட்களை அன்பளிக்க ஏற்பாடாகி இருந்தது.

பெருந்திரளான பங்குமக்கள், கல்லூரி மாணவிகள் கலந்து கொண்ட இப்பூசையில் பணமாகவும், பொருளாகவும், உணவுப் பொருட்களாகவும் காணிக்கை கொடுக்கப்பட்டன. இம்முயற்சியைப் பலரும் பாராட்டினர்,

### தபசுகால யாத்திரை:

தபசுகால யாத்திரை ஸ்தலமாக விளங்கும் கினித்துமக்கு சுமார் 75பேருக்கு மேற்பட்ட யாத்திரைக் கோஷ்டியொன்று திரு. எ. டபிள்யூ அரியநாயகம் தலைமையில் புறப்பட்டுச் சென்றது.

### மாதா சபைத்தினம்:

எதிர்வரும் 25-ம்திகதி "உலகமாதா தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட திருமலை மாவட்ட மாதாசபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

A. W. A.

## நன்றித் துதி

யேசுவின் திவ்விய இருதயத்தின் இரக்கத்தினாலும், அர்ச். 23-வது அருளப்பர், யூதாததேயு இவர்களின் வேண்டுதலாலும், நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டு கிடைக்கப் பெற்றதினால், நேர்த்திப்படி, எனது நன்றியை பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.
பெரியவிளான்.

● அண்மையில் நடந்தேறிய இந்திய லோகசபையின் ஐந்தாவது பொதுத்தேர்தலிலே மூன்னுள் இந்திய மகாராசாக்கள் பன்னிருவரும் வெற்றிபெற்றிருக்கிறார்கள், இவர்களில் நால்வர் இராஜஸ்தானிலும், மூவர் மத்திய பிரதேசத்திலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார்கள்,

## தோட்டப்பகுதி ஏழைகளின் மத்தியில் விசேஷ சேவை

இலங்கைத்தேசிய சினொட் 1968-ம் ஆண்டு செய்து கொண்ட முடிவின்படி இலங்கையிலுள்ள பல மேற்றிராசனங்களும் கிறிஸ்தவ சேவையிலும் போதனையிலும் எங்கெங்கு கூட்டாக முயற்சிகள் எடுக்க முடியுமோ அங்கங்கெல்லாம் அம்முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றது. ஆரம்பமாக கண்டி மேற்றிராசனமும் காலி மேற்றிராசனமும் தம்பகுதிகளிலுள்ள தோட்டமக்களின் முன்னேற்றத்துக்காக, ஆன்ம கருமங்களுடன் சமூகத் தொண்டு செய்வதற்கும் ஒழுங்குகள் சில செய்திருக்கின்றன. சென்றவாரம் பலாங்கொடையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், இரு மேற்றிராசனங்களுக்கும் உரிய பல குருமார், துறவிகள், கன்னியர்கள் ஒன்றுகூடி தம்மால் எவ்வித உதவிகள் செய்யமுடியுமென வாக்குறுதிகள் கொடுத்திருக்கின்றனர். காலி மேற்றிராணியாராகிய வந்தனைக்குரிய சேரம் அடிகளார் அக்கூட்டத்தில் பங்குபெற்று ஊக்கம் அளித்திருக்கின்றார்.

## திருச்சபை அதிகாரம் எங்கிருந்து?

சென்றமாதம் பரிசுத்த தந்தை வத்திக்கான் உயர் அதிகாரிகளடங்கிய சபையில் உரைநிகழ்த்தியபோது திருச்சபையின் அதிகாரம் எங்கிருந்து வருகின்றது என்பதை மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்வதன் அவசியத்தை வற்புறுத்தி, அவ்வதிகாரம் மக்களிடத்திலிருந்து வரவில்லையென்றும் அது தேவனிடத்திலிருந்தே வருகின்றது என்பதையும் திட்டவட்டமாக எடுத்துக் கூறினர். ஆனும் திருச்சபை பொதுநிலை மக்களின் நன்மைக்காகச் சேவைசெய்யத் தேவனுல் அதிகாரம் கொடுக்கப்பட்டது என்பதை அவர் சுட்டிக்காட்டினர். இக்கொள்கையைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாவிட்டால் திருச்சபை நியமனங்களிலும் ஆட்சிமுறையிலும் பல சிக்கல்கள் ஏற்படலாம் என்பதைம் அவர் விளக்கியருளினர்.

## கிறீஸ்தவனின் குணம் யாது?

பிறேசில் தேசத்தில் அத்தேச கத்தோலிக்க அதிகாரிகள் வருடாவருடம் தபசுகாலத்தில் சகோதரத்துவ நல்லுணர்ச்சியை விசேஷமுறையில் தூண்டிவருவது வழக்கம். இவ்வருட முயற்சிகளுக்கு பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தனது ஆசியை ஈந்து கூறியிருப்பதாவது: "கிறீஸ்தவனுயிருக்க வேண்டுமாகில் ஒருவன் தேவனுக்காக தன் அயலவனுடைய நன்மையை விரும்புபவனுயிருக்க வேண்டும். சமூக முன்னேற்றத்துக்கு கிறிஸ்தவர்கள் அயராது உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஊன்றிக் கூறிய பரிசுத்த தந்தை துன்பப்படுகிறவர்கள் மேலும், வியாதிஸ்தர்மேலும், வறியவர்கள் மேலும், வீடு, உணவு, உடை இல்லாதவர்கள் மேலும் இரங்கி இக்குறைபாடுகளை அகற்ற தம்மாலானவற்றைச் செய்யப் பின்னிற்கின்றவர்கள் கிறிஸ்தவர்களெனத் தகுதியற்றவர்கள்," எனக் கூறினர்.

● இந்திய பொதுத்தேர்தலையிட்டு அரசாங்கம் லோகசபைத் தேர்தலுக்கென 35 கோடி வாக்குப்பதிவுச் சீட்டுகளையும், தமிழ்நாடு, ஒறிசா, மேற்குவங்காளமாகிய மூன்று இராச்சியங்களினதும் சட்டசபைத் தேர்தல்களுக்கென 620லட்சம் வாக்குப்பதிவுச் சீட்டுகளையும் அச்சிட்டிருந்தது.

● தமிழ்நாட்டிலே இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில இடதுசாரிக் கம்யூனிஸ்தர்களுக்கு ஒரு இடந்தானும் கிடைக்கவில்லை. இக்கட்சியினரில் 37போ அபேட்சகர்களாகப் போட்டியிட்டனர். அனைவரும் தோல்வியடைந்தது மட்டுமல்ல, 30 பேர் கட்டுப்பணத்தையும் இழந்தார்கள்.

● நியூசிலாந்திலுள்ள முதன்மைவாய்ந்த கிறிக்கெற் விளையாட்டுவீரர்கள் மனச்சாட்சிக்கண்டனம் காரணமாக ஞாயிற்றுக்கிழமைகளில் 'டெஸ்ற்' எனப்படும் கிறிக்கெற் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் விஷயமாய் எதிர்ப்புத் தெரிவித்தமையாலே இனிமேல் நியூசிலாந்திலே இங்கிலாந்துக் கிறிக்கெற் கோஷ்டியுடன் நடக்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளை ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்துவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

● அலெக்பொஸ்றர் என்ற ஆஸ்திரேலிய மாணவ சைக்கிள் ஓட்டக்காரர் சிலவாரங்களின்முன் இடையே எங்கும் தரியாது 222மைல் தூரத்தைச் சைக்கிளில் ஓடிச்சென்று மாணவ உலகைப் பிரமிக்கச் செய்திருக்கிறார். 16வயதுடைய இந்தமாணவர் இத்தனைமைல் தூரத்தையும் சைக்கிளில் ஓடிச்செல்ல 11மணித்தியாலம் 51நிமிஷம் பிடித்தது, அதாவது மணிஒன்றுக்குச் சராசரியாகப் 18 மைல் ஓடியிருக்கிறார், 1972ஆம் ஆண்டு ஜேர்மனி தேச மூனிச்நகரில் நடைபெறவிருக்கும் சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்வதே இவரின் பேராவலாகும்.

## யெத்சமனி ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன், ஏதேன்தோட்டம் அழகுநிறைந்து அதில் ஆதித் தாய் தந்தையர் பரிசுத்தம் விளங்க அமைத்தார். அதுபோன்று யெத்சமயில் சந்திர ஒளி சுந்தர யேசுவின் மீதுவீழ்ந்தொளிர, அவரைச் சூழ்ந்த பிரகாசமிகுந்த ?சாயையுடன் விளங்க, அந்த மலர்வனம் மிகுந்த அழகுமயமாய்த் திகழ்ந்தது. யேசு பரிவோடு பிதாவைப் பிரார்த்தனைபுரிந்தவிடம் அழகு பொலிந்து விளங்க, அங்கண் அவர் சிந்திய திருவிரத்தத்தால் ஆங்கு பரிசுத்தம் நிறைந்து இலங்க யெத்சமனி மலர்வனம் அழகும், புனிதமும் நிரம்பி மிளிர்ந்தது.

என்றும் அழியாத விலைகொள்ள முடியாத, ஆன்மாவின் அழகுறும் பேழையாம் மானிடர் தேகம், அழகிழந்த நடை, உடை, பார்வையினும் பாசவலை வீசி, மதியொழிந்து, கதியழிந்து, வாழ்விழந்து, இறைவன் சாயலாய் அமைந்துள்ள ஆன்மா அவலட்சணமாய்ப் பரிசுத்தம் பிறழ்ந்து மாளாமல் பேயின் மாய்கைகளில் விழாமல், எப்பொழுதும் விழித்திருந்து செபித்தல் வேண்டும்.

யெத்சமனி மலர்வதனத்தில் யேசு மூன்றுமுறை செபித்தார். பரம தந்தை பதில்மொழியொன்றும் பகர்ந்ததில்லை. துயரத்தின் மிகுதியால் இரத்த வெயர்வை சிந்தி மரணஅவஸ்தையுற்ற பொழுதிற்றான் வானவன் வந்து வள்ளல் தமக்கு நல்லாறுதல் உரைத்தான். பன்முறையும் நாம் பிரார்த்தனை புரிந்தாலும், பயனொன்றும் காணுதிருந்தாலும், சோர்வடைந்து போகாமற் தேவனின் சித்தத்திற்கமைந்து விடாமுயற்சியுடனும், மன உறுதியுடனும் செபம்செய்து இறைவனின் திருவருளைப் பெறுதல் வேண்டும்.

சரீரத்தில் தூய்மையும், ஆன்மாவிற் பரிசுத்தமும் விளங்க, நாம் பாவத்தை விலக்கி இறைவன் வதியும் இதயமலர் தூய ஆவியின் ஒளி பெற்று மலர, யெத்சமனி எழில்வனத்தை யேசு உவகையுடன் நாடிப் பரமபிதாவைப் பணிந்து பிரார்த்தனை புரியச் சென்றதுபோன்று, நாம் எந்நேரமும் செபதப ஒறுத்தல்களைப் புரிந்து, புண்ணிய மணங்கமழும் அழகுடன் நிறைந்து, இறைவனை அன்புடனும் ஆவலுடனும் நாடித்தேடி அவரது அருளைப்பெற்று ஞான வாழ்விற் சிறந்தவர்களாய் விளங்குதல் வேண்டுமன்றோ.

● இத்தாலிய அரசாங்கம் பெற்ரோலுக்கு அதிகம் கூடிய திலை விதித்திருப்பதாலே வத்திக்கானிலே பெற்ரோலினதும், மற்றும் சில உணவுப் பொருட்களினதும் விலைகளை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தலைச் சந்தைகளிலே சில உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளமையானது வத்திக்கானுக்கு ஏற்றிறக்குமதிச் செலவைக் கூட்டிவிட்டிருக்கிறது.

## பூசை வழிகாட்டி

**பங்குனி — 1971.**

29. திங்கள் நாள் பூசை [ஊ]
வாசகம்: தானி. 13: 41—62
சுவிசேஷம்: அரு. 8: 12—20

30. செவ். நாள் பூசை [ஊ]
வாசகம்: எண். 21: 4—9
சுவிசேஷம்: அரு. 8: 21—30

31. புதன் நாள் பூசை [ஊ]
வாசகம்: தானி. 3: 14—20, 91, 92, 95
சுவிசேஷம்: அரு. 8: 31—42

**சித்திரை**

1. வியா. நாள் பூசை [ஊ]
வாசகம்: ஆதி. 17: 3—9
சுவிசேஷம்: அரு. 8: 51—59

2. வெள்ளி நாள் பூசை [ஊ]
வாசகம்: எரே. 20: 10—13
சுவிசேஷம்: அரு. 10: 31—42

3. சனி நாள் பூசை [ஊ]
வாசகம்: எசேக். 37: 21—28
சுவிசேஷம்: அரு. 11: 45—56

4. ஞாயிறு குருத்தோலை ஞாயிறு [சி]
1ஆம் வாசகம்: இசை. 50: 4—7

*சத்தியவேத பாதுகாவலன்*

## எமது கடமை

ஒரு மனிதன் மரித்து இறைவனின் நீதியாசனத்துக்கு முன் வந்தபோது அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நான் உமது கற்பனைகளை மீறிநடக்கவில்லை. நேர்மையற்ற செயல்களையோ கொடிய செயல்களையோ செய்யவும் இல்லை. ஆண்டவரே, இதோ பாரும். என் கரங்கள் சுத்தமாக இருக்கின்றன" என்றான். இதைக் கேட்ட ஆண்டவர் மாறுத்தாரமாக, "மைந்தா, உன் கரங்கள் சுத்தமாக இருக்கின்றன என்பது மெய்தான். ஆனால், அவை வெறுமையாக இருக்கின்றனவே" என்றார்.

ஆம், கடவுள் முன்னிலையில் எமது கரங்கள் சுத்தமாக இருந்தால் மட்டும் போதாது. வாழ்வின் கனிகளால் அவை நிரம்பியிருக்க வேண்டும்.

மனிதன் சோம்பியிருப்பதற்காகப் படைக்கப்பட்டவனல்லன். இறைவனுக்காகவும், பிறருக்காகவும், தனக்காகவும் அவன் உழைக்க வேண்டுமென்பதே இறைவனது திட்டம். கிறிஸ்துநாதர் எமக்கு ஓர் இலட்சிய வாழ்வை வாழ்ந்து காட்டினர். கடின உழைப்பு, நீண்ட பிரயாணங்கள், ஓயாத வேலை—இவற்றிலிருந்து விடுபடவேண்டுமென்று அவர் என்றுமே விரும்பியதில்லை. இறைவனது சித்தப்படி அவரது வேலையைச் செய்து முடிப்பதே தமக்கு அன்னமும் பானமும் ஆகும் என்று கூறியிருக்கிறார்.

மீட்புத்திட்டத்தில் கிறிஸ்துநாதரைப் போலவே எமக்கும் வேலையுண்டு. இதுவே இறைவன் எமக்களித்த கொடைகளுள் மிகப் பெரியது. ஏனெனில் இங்கு தமது செயலிலேயே எமக்கும் பங்கு கொடுக்கின்றார்.

தேவதிருவருளில வளர்வதற்கு வழி, அவர் எமக்களித்த கடமைகளை கூடிய அளவு நன்றாகச் செய்வதுதான். பயிற்சியின் மூலமே உடல் உறுதியடைகின்றது. நிறைய உணவை உட்கொண்டாலும் உழைப்பில்லாவிட்டால் உடல் தளர்ச்சியுற்று நோய்நொடிகளுக்கு இடமாகும். அதுபோன்றுதான் கிறிஸ்துவின் அருளால் நிரப்பப்பட்டபோதும், நாம் ஒன்றும் செய்யாமல் வாளா இருந்தால் தளர்ச்சியுற்று ஆன்மீக பலத்தை இழக்க ஏதுவாகும்.

ஒவ்வொருவருக்கும் கொடைகள் வேறுபடுகின்றன. அதேபோல் அவர்கள் பணியும் வேறுபடும். இப்பணிகளில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை. கிறிஸ்துநாதர் போதிக்கும் போதும் நோயாளரைக் குணப்படுத்தும் போதும் மட்டும் தேவசித்தத்தை நிறைவேற்றவில்லை. தச்சனது தொழிற்கூடத்தில் மரமறுக்கும்போது கூட அதை அனுசரித்துத்தான் நடந்தார்.

எங்களுக்குத் திறமைகள் குறைவு, அல்லது மற்றவர்கள் எம்மிலும் பார்க்கக்கூடிய திறமையுள்ளவராய் இருக்கிறார்கள். நாம் அவர்களைப்போல் எமது கடமைகளை குறைவற நிறைவேற்றுவது சாத்தியமாகாது என்ற தவறான எண்ணம் பலர் மனதில் இருந்து வருவதைக் காண்கின்றோம். தமக்குப் பிடித்தமான சிலருக்குத்தான் இறைவன் தம் கொடைகளை மிகுதியாக அருளுகிறார் என்றும் அவர்களுக்குத் தான் பணிசெய்யக் கடமையுண்டு என்றும் தப்பாக எண்ணுகிறார்கள். ஆனால், கிறிஸ்துநாதர் கூறிய உவமை வேறு விதமாக இருக்கின்றது. ஐந்து தலேந்து பெற்றவனும் ஒரு தலேந்து பெற்றவனும் ஒரே முயற்சியோடு உழைக்க வேண்டும் என்பதை அது உணர்த்துகின்றது.

# என்ன தவம் செய்துவிட்டோம்

இது நமக்குத் தவக்காலம். தவம் இன்றி இரட்சணியமில்லை என்று நமது ஆண்டவரே கூறியிருக்கிறார். பழைய ஏற்பாட்டு ஏடுகளிலே இறைவன் தவத்தின் அவசியத்தை அடிக்கடி தம் மக்களுக்கு வலியுறுத்தி வந்துள்ளார். சிந்துப் பொருளாகிய நமது ஆன்மா கீழ் உணர்ச்சிகளும, இச்சைகளும் மிருக உணர்ச்சிகளும் உடைய சரீரத்தினுல் கட்டி ஆளப்படுகிறது. ஆத்துமம் வேகமுடையதுதான்; ஆனால் சரீரமோ துர்ப்பலமுள்ளது. கண்களின் இச்சைக்கும், மாமிசத்தின் இச்சைக்கும், உலக இன்ப சுகங்களுக்கும், பெருமை சலாக்கியங்களுக்கும் ஆன்மா அடிமைப்பட்டுவிடும், எவ்வளவோ பாக்கியமான அந்நிலேயில் நம் ஆதித்தாய் தந்தையரைப் படைத்த இறைவன் அவர்களுக்கு தவத்தின் அடையாளமாகவே ஒரு கட்டளையைக் கொடுத்து அவர்களைப் பரீட்சித்தார் போலும்.

உலக வாழ்விலேயே பாடின்றிப் பட்டமில்லை என்பது பொது நியதியாகும். நமது மோட்சநிலையை அடைவதற்கும் பாடு (தவம்) அவசியமாகும். பழைய ஏற்பாட்டு நூல்கள் காலத்துக்குக் காலம் தீர்க்கதரிசிகளும், ஞானிகளும், முனிவர்களும மகான்களும் தபத்தின் இன்றியமையாமையை எடுத்தியம்பி மக்களை நல்வழிப்படுத்தியதை நமக்குத் தெளிவாக்குகின்றன. கிறிஸ்துவின் வருகைக்கு முன்னோடியாய் விளங்கிய புனித யோவான் ஸ்நானனும், "தபஞ் செய்யுங்கள் ஏனெனில் மோட்ச இராட்சியம் சமீபித்துள்ளது" என்று கூறுரைத்து மக்களை வழிப்படுத்தினர்.

நமது அரிய இரட்சகர் காட்டிய வழிதான் என்ன? செபவழியும், தபவழியுமன்றி வேறென்ன? தமது பகிரங்க வாழ்க்கையை ஆரம்பிக்கும் போதே நாற்பதுநாள் இரவும் பகலும் கடுந்தவமியற்றி உபவாசமாயிருந்தார் என்று நற்செய்தி ஏடுகள் எடுத்துரைக்கின்றன. அவருடைய வாழ்க்கையே தபவாழ்க்கை. பாடுகளும் சிலுவையும் மரணமும் அல்லவா அவரது முடிவு? அவரைப் பின்பற்றிய அவரது சீடர்களும், ஆதிக் கிறிஸ்தவர்களும், வேதசாட்சிகளும், புனிதர்களும், கிறிஸ்துவின் திருமறையைச் சார்ந்த போரசர்களும், சிற்றரசர்களும, பெரும பிரபுக்களும், சாதாரண ஏழைமக்களும், தபவாழ்க்கை, பரித்தியாக வாழ்க்கைவாழ்ந்து அன்புக்கு அன்புசெய்து அறவாழ்வு வாழ்ந்து வந்தனர்.

முற்காலங்களில் தபக்காலம் மிகவும் கடுமையான ஒறுத்தல் உபவாசங்கள், தபக்கிருத்தியங்கள் நிறைந்த பக்திமயமான காலமாய்த் திகழ்ந்தது. விபூதிப் புதன்கிழமை தொடக்கம பெரிய வெள்ளி ஈறுக 40 நாளும் ஒருசந்தி, உபவாசம் இருப்பார்களாம். விபூதிப் புதன் அன்று தலையை மொட்டை அடித்து, சாம்பல் பூசி, சாக்குப் போன்ற தடித்த உடைகளை உடுத்து 40 நாளும் தபம் செய்வார்களாம். ஆனால இன்றோ?

ஆதித் திருச்சபையில் 40 நாளும் ஒருசந்தி நாட்களாக இருந்தது. பின்னர் தபக்காலத்தின் எல்லா வெள்ளிக்கிழமைகளும ஒருசந்தி நாட்களாக இருந்தன. சுமார் 15 ஆண்டுகளுக்குள்தான் இப்பொழுது இருக்கும் மாற்றம் நடைமுறைக்கு வந்தது. வேலை இல்லாத் திண்டாட்டம், உணவுப் பஞ்சம், வறுமை, உணவுப்பொருட் தட்டுப்பாடு, பொருட்களின் விலை ஏற்றம், இன்னோரன்ன காரணங்களினுல் நலிவுறும் மக்களின் நலன்கருதி திருச்சபை இளக்காரத்தையும், சட்டங்களின் தளர்ச்சியையும் ஏற்படுத்தியது. சில தேசங்களில் வெள்ளிக்கிழமைகளில், சுத்த போசனம மாமிசத் தவிர்ப்பு என்பனவற்றில்கூட இளக்காரம் அளித்துள்ளது. ஆனால் வசதி உள்ளவர்கள்கூட.........

திருச்சபை வழிகாட்டலாமேயன்றி எம்மை இரட்சிக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருடையதே. நாம் நமது கடமையைச் செய்கின்றோமா? கிறிஸ்துவின் வழி நடக்கின்றோமா? நம் அயலவருக்கு, நம்மோடு வாழும், நம்மோடு வேலைசெய்யும், நம்மோடு பழகும் பிறசமய அன்பர்களுக்கு நமது சமய வாழ்வைப்பற்றியும், சமய அனுட்டானங்கள் பற்றியும இடறல்பட விபரீத எண்ணங்கொள்ள நாம் வழிவகுக்கின்றோமா? எமது வாழ்க்கை வெறும் வேஷமா? நாம் பெயரளவில் தான் கிறிஸ்தவர்களா? ஒவ்வொருவரும எண்ணிப்பார்க்க வேண்டிய காலம் இது. சில வருடங்களுக்குமுன் தபக்காலமென்றால் எவ்வளவு பக்தி, உருக்கம், தியானம நிறைந்த காலமாயிருக்கும். கிறிஸ்தவ இல்லங்களில எவ்வளவு பக்தி, எங்கு பார்த்தாலும் வியாகுல பிரசங்கம வாசிக்கும் சத்தம், சித்தாகுலத் திரட்டு; அம்மானை, ஒப்பாரி என்பன பாடுபசத்தம் கேட்கும். ஆனால் இன்றோ சினிமாப் பாட்டு, சீட்டாட்டம், வீண் கேளிக்கை, உண்டாட்டுக்களியாட்டு; தபசுகாலத்தில் ஒலிபெருக்கி சகிதம் கலியாணக் கொண்டாட்டங்களுக்கும் குறைவில்லை. சிற்றின்ப நாட்டத்தில் சிக்குண்டு சிதைவுற்று சிறுமதியாளராய் வாழ்கின்றார் பலர்.

நமது சமயம் அன்பின் சமயம். கிறிஸ்துவின் அன்பை, மன்னிப்பை, மதாரத்தன்மையை, தயாளகுணத்தை, தியாகத்தை நாம கொண்டிருக்கிறோமா? பாவத்தைப் போக்க பரமசுதன் பாடுகள் பட்டாரல்லவா? அப் பாவத்தின் காரணர்களான நாம்பாடு எதுவும் இன்றி விண்ணரசை அடைய முடியுமா? நமது சரீரத்தை வென்றால் ஒழிய பேரின்ப வீடு சேரமுடியாது. அதுவே சரியானவழி. சரீரத்தை வெல்லுதல் என்பது சுலபமான காரியமல்ல. சரீரத்தை ஒறுத்தல் அதை வெல்லுதற்கு ஒரு வழியாம். எமது உடலையும், அதன் ஆசாபாசங்களையும் கட்டுப்படுத்துவது பெரியதவமாகும்.

சொல்லிலும் செயலிலும் பிறரன்பு மலர வாழ முன்வரவேண்டும். ஒவ்வொரு செயலும் ஆற்றுமுன் இது தவக்காலம் அல்லவா என்ற எண்ணத்தைக் கண்முன் நிறுத்தினுல் நற்செயல் செய்யத் தூண்டப்படுவோம். நமது சரீரம் கடிவாளமற்ற குதிரையைப்போல் ஓடவிடாது அதை மடக்கி, மட்டுப்படுத்த வேண்டியது அவசியம். அப்பொழுது சிரமப்படுவோம். அந்தச் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் விடுவதே தபமாகும். நமது சரீரத்தின் இச்சைகளுக்கு இடங்கொடாது வாழ்வதே தவவாழ்க்கை. இனிமேல் இன்னும் வரஇருக்கும் எஞ்சிய நாட்களிலாவது நாம் இயன்ற அளவு தவப்போக்குடையவராய் வாழ, வேசவுக்குப் பரிகாரம்செய்யும் மக்களாய் வாழ முயலுவோமாக.

— வளன் —

"தவம் செய்யாவிடில் எல்லோரும் சேதமாவீர்கள்"
— கிறிஸ்து


விரைவில் எதிர்பாருங்கள் !

உயிர்ப்பின் உயரிய உண்மைகளைத் தாங்கிவரும்

**'பாஸ்கா மலர்'**

இம் மலரில்
மணம் வீசும் படைப்புகளைப் படித்து
போட்டியில் பங்குபெறுங்கள்

வெளியிடுவோர் :—
மறை ஆசிரியர் குழு,
புனித அன்னம்மாள் கோயில்,
மானிப்பாய்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு பங்குனி மாதம் 27-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: 'கதலிக்பிறஸ்,'' யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.